07974

OL/2017/12-T-I,II(OLD)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

| | |
|---|---|
| ශෛවනෙරි | I, II |
| சைவநெறி | I, II |
| Saivaneri | I, II |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## சைவநெறி I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** 'உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்...' என்னும் பெரியபுராண வரியினாற் போற்றப்படும் கடவுள்
(1) சிவபெருமான் (2) நாராயணன்
(3) ஆறுமுகன் (4) நான்முகன்

**2.** "சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்று பாடியவர்
(1) சேக்கிழார் (2) மாணிக்கவாசகர்
(3) திருமூலர் (4) சேந்தனார்

**3.** எமது கண்கண்ட தெய்வங்கள்
(1) சிவனும் சக்தியும் (2) மாதாவும் பிதாவும்
(3) திருமாலும் இலட்சுமியும் (4) முருகனும் வள்ளியும்

**4.** பஞ்சாங்கத்தில் 'வித்துநாள்' எனக் குறிப்பிடப்படும் சடங்கு
(1) ஏர்மங்கலம் (2) ஆயுத பூஜை
(3) பொலிச் சடங்கு (4) முளைப்புச் சடங்கு

**5.** திருமணச் சடங்கில் மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்ற தத்துவத்தைக் குறிப்பது
(1) அம்மி மிதித்தல் (2) மோதிரம் எடுத்தல்
(3) மாலை மாற்றுதல் (4) தாலி கட்டுதல்

**6.** 'உழவாரப் படையாளி' எனச் சிறப்பிக்கப்படும் நாயனார்
(1) திருநாவுக்கரசர் (2) சுந்தரமூர்த்தி நாயனார்
(3) திருஞானசம்பந்தர் (4) மாணிக்கவாசகர்

**7.** சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெறுவதற்காக உமாதேவியார் அனுட்டித்த விரதம்
(1) பங்குனி உத்தர விரதம் (2) கேதாரகௌரி விரதம்
(3) கந்தசஷ்டி விரதம் (4) மார்கழித் திருவாதிரை விரதம்

**8.** இறைவனின் முடியிலிருந்த கொன்றை மாலை சூட்டப் பெற்றவர்
(1) எறிபத்தர் (2) எச்சதத்தன்
(3) கண்ணப்பர் (4) விசாரசருமர்

**9.** காரைக்காலம்மையார் பாடிய பிரபந்தங்கள் இடம்பெற்றுள்ள திருமுறை
(1) 7ஆம் திருமுறை (2) 9ஆம் திருமுறை
(3) 11ஆம் திருமுறை (4) 12ஆம் திருமுறை

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

10. சைவ சந்தானத்திற்கு முதல்வர்
(1) திருநந்திதேவர் (2) மெய்கண்ட தேவர்
(3) சனகர் (4) சனாதனர்

11. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, செங்கலடி ஆகிய இடங்களில் சிவதொண்டன் நிலையங்களை நிறுவியவர்
(1) கடையிற் சுவாமிகள் (2) யோகர் சுவாமிகள்
(3) செல்லப்பா சுவாமிகள் (4) செல்லத்துரை சுவாமிகள்

12. தட்சிணாயனத்தின் முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகை
(1) தைப்பொங்கல் (2) தீபாவளி
(3) வருடப்பிறப்பு (4) ஆடிப்பிறப்பு

13. கன்மேந்திரியங்கள் எனப்படுபவை
(1) நாதம், விந்து, சாதாக்யம், ஈசுரம், சுத்தவித்தை (2) காலம், நியதி, கலை, வித்தை, அராகம்
(3) வாக்கு, வாயு, பாணி, பாதம், உபத்தம் (4) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

14. இராவணனும் அவனது தாயும் வழிபட்ட தலம்
(1) திருக்கோணேச்சரம் (2) முன்னேஸ்வரம்
(3) நகுலேஸ்வரம் (4) திருக்கேதீச்சரம்

15. திருவருள் பற்றியும் அதனது பயன் பற்றியும் விளக்கமாகக் கூறும் சாத்திர நூல்
(1) கொடிக்கவி (2) உண்மை விளக்கம்
(3) வினாவெண்பா (4) திருவருட்பயன்

16. இலங்கையில் எழுந்த தலமகிமை கூறும் புராணங்களில் ஒன்று
(1) திருக்கரசைப்புராணம் (2) சிவபுராணம்
(3) சிவராத்திரிபுராணம் (4) ஏகாதசிபுராணம்

17. திருநாவுக்கரசரது தேவாரங்கள் புலப்படுத்தும் பாடல்வகை
(1) தூது, மாலைமாற்று (2) திருவிருத்தம், திருத்தாண்டகம்
(3) திருவெம்பாவை, திருப்பாவை (4) திருத்தொண்டத்தொகை, அந்தாதி

18. உற்பத்தி காண்டம் முதல் தட்சகாண்டம் வரையான ஆறு காண்டங்களைக் கொண்ட புராணம்
(1) கந்தபுராணம் (2) பெரியபுராணம்
(3) திருவாதவூரடிகள் புராணம் (4) திருவிளையாடற் புராணம்

19. கலைமகளின் அருளை வேண்டி குமரகுருபரரால் பாடப்பட்ட பிரபந்தம்
(1) அபிராமி அந்தாதி (2) சரஸ்வதி அந்தாதி
(3) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (4) சகலகலாவல்லிமாலை

20. இறைவனின் பரிக்கிரக சக்தியாகக் கூறப்படுவது
(1) ஆணவம் (2) கன்மம்
(3) மாயை (4) திரோதாயி

21. சமயதீட்சை, விசேடதீட்சை என்பவற்றைப் பெற்றவர்கள் இறுதியாகப் பெறும் தீட்சை
(1) நயன தீட்சை (2) நிர்வாண தீட்சை
(3) மானச தீட்சை (4) யோக தீட்சை

22. இலங்கையில் கிடைக்கும் தமிழ் நூல்கள் வரிசையில் காலத்தால் முந்திய நூலாக விளங்குவது
(1) யாழ்ப்பாணவைபவமாலை (2) பரராசசேகரம்
(3) சரசோதிமாலை (4) செகராசசேகரமாலை

23. சைவவித்தியாவிருத்திச் சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு
(1) 1879 (2) 1902 (3) 1915 (4) 1924

24. இலங்கையில் ஏகாதசிபுராணம் தோற்றம் பெற்ற காலம் யாது?
(1) அனுராதபுர காலம் (2) பொலன்னறுவைக் காலம்
(3) ஒல்லாந்தர் காலம் (4) ஆங்கிலேயர் காலம்

[பக். 3 ஐப் பார்க்க
Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

25. நித்திய பூசையில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகச் செய்யப்படும் கிரியை
(1) காமிகக் கிரியை எனப்படும்.
(2) ஆன்மார்த்த கிரியை எனப்படும்.
(3) சாயரட்சை எனப்படும்.
(4) நைமித்திய கிரியை எனப்படும்.

26. கோயில்கள் பண்டகசாலைகளாகவும் தொழில் வாய்ப்பினை வழங்கும் நிறுவனங்களாகவும் கடன் வழங்கும் வங்கிகளாகவும் விளங்கிய காலம்
(1) சங்ககாலம்
(2) சோழர் காலம்
(3) பல்லவர் காலம்
(4) நாயக்கர் காலம்

27. உழவர் தமது தொழிலை ஆரம்பிக்கும் போது முதன்முதலாக மேற்கொள்வது
(1) முளைப்புச் சடங்கு
(2) பொலிச் சடங்கு
(3) ஏர்மங்கலச் சடங்கு
(4) ஆயுத பூஜை

28. "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்..." என்ற தோத்திரத்தைப் பாடியவர்
(1) திருஞானசம்பந்தர்
(2) திருநாவுக்கரசர்
(3) மாணிக்கவாசகர்
(4) சுந்தரமூர்த்தி நாயனார்

29. சைவாலயங்களில் உள்ள கொடிமரம் சுட்டிநிற்கும் பொருள்
(1) பதி
(2) பசு
(3) ஆணவம்
(4) மாயேயம்

30. மட்டக்களப்பில், சைவமக்கள் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றிக்கொள்ளும் தீர்த்தம்
(1) கீரிமலைத் தீர்த்தம்
(2) முகத்துவாரத் தீர்த்தம்
(3) மாமாங்கத் தீர்த்தம்
(4) வில்லூன்றித் தீர்த்தம்

31. 'வானவன் மாதேவீச்சரம்' என்று அழைக்கப்படுவது
(1) முதலாம் சிவாலயம்
(2) இரண்டாம் சிவாலயம்
(3) ஐந்தாம் சிவாலயம்
(4) திருத்தம்பலேச்சரம்

32. முருகன் குருவாய் வந்து, எந்த அடியவருக்கு உபதேசம் செய்தார் ?
(1) அபிராமிப்பட்டருக்கு
(2) கச்சியப்பருக்கு
(3) காளிதாசருக்கு
(4) அருணகிரிநாதருக்கு

33. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுள் ஒருவர்
(1) குமாரசாமிப் புலவர்
(2) சின்னத்தம்பிப் புலவர்
(3) சரவணமுத்துப் புலவர்
(4) சபாபதிப் புலவர்

34. பெரியானைக்குட்டிச் சுவாமிகளது சமாதியில் நிறுவப்பெற்ற சிவாலயமாக விளங்குவது
(1) கொழும்பு, முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் ஆலயம்
(2) கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்
(3) இராமநாதேஸ்வரர் ஆலயம்
(4) நவநாதேஸ்வரர் ஆலயம்

35. வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மூலஸ்தானத்துள் இருப்பது
(1) ஸ்ரீசக்கரம்
(2) சுதர்சனச் சக்கரம்
(3) சாளக்கிராமம்
(4) கருடன்

36. குளிர்ச்சுரத்தை நீக்கி அடியவர்களைக் காப்பாற்றிய நாயனார்
(1) திருஞானசம்பந்தர்
(2) திருநாவுக்கரசர்
(3) சண்டேசுவர நாயனார்
(4) சாக்கிய நாயனார்

37. கொழும்பில் பொன்னம்பலவாணேஸ்வரத்தைக் கற்றளியாக அமைத்தவர்
(1) சேர். கந்தையா வைத்தியநாதன்
(2) சேர். பொன். இராமநாதன்
(3) சேர். பொன். அருணாசலம்
(4) கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

07974

**38.** 'அபிஷேகக் கந்தன்' எனப் போற்றப்படும் இறைவன்

(1) நல்லூர்க் கந்தன்
(2) கதிர்காமக் கந்தன்
(3) செல்வச்சந்நிதிக் கந்தன்
(4) மாவிட்டபுரக் கந்தன்

- பின்வரும் அட்டவணையில் **A** இலிருந்து **I** வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **39, 40** ஆகிய வினாக்களுக்கான விடைகளைத் தெரிவுசெய்க.

| **சைவசமய குரவர்** | **பிறந்த இடம்** | **அற்புதங்கள்** |
|---|---|---|
| A - திருஞானசம்பந்தர் | D - திருவாமூர் | G - செங்கட்டிகளைப் பொன்கட்டிகளாக்கியமை |
| B - திருநாவுக்கரசர் | E - திருநாவலூர் | H - திருக்கதவை அடைக்கச் செய்தமை |
| C - சுந்தரர் | F - சீர்காழி | I - கல்லைத் தெப்பமாக மிதக்கச் செய்தமை |

**39.** திருத்தொண்டத் தொகையைப் பாடியவரோடு தொடர்புடைய சேர்மானம்

(1) ADI (2) BDH (3) CEG (4) CFG

**40.** தருமசேனர் என்ற பட்டப்பெயருடன் விளங்கிய சைவசமய குரவர் ஒருவரோடு தொடர்புடைய சேர்மானம்

(1) AEI (2) BFG (3) CFH (4) BDI

**

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ශෛවනෙරි I, II
சைவநெறி I, II
Saivaneri I, II

## சைவநெறி II

* **முதலாம்** வினாவும் **இரண்டாம்** வினாவும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினாவின் விடைக்கு **16** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **8** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) கந்தபுராணத்தைத் தமிழில் இயற்றியவர் யார் ?

(ii) கடவுளுக்குச் சொருபநிலை, தடத்தநிலை என இருநிலைகளைக் குறிப்பிடும் தத்துவம் எது ?

(iii) 'கடவுள் ஒருவனே' என்பதை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

(iv) 'பறாளை விநாயகர் பள்ளு' என்னும் பிரபந்தத்தைப் பாடியவரின் பெயர் என்ன ?

(v) நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார் ?

(vi) சைவநாற்பாதங்கள் **இரண்டினை** எழுதுக.

(vii) திருக்கேதீச்சரத் தல வரலாற்றினை அறிய உதவும் தொன்மையான நூல்கள் **இரண்டினைத்** தருக.

(viii) இலங்கையில் பிரச்சித்தமான **இரண்டு** கண்ணகி அம்மன் ஆலயங்களின் பெயர்களை எழுதுக.

(ix) "ஆனா அறிவா அகலா அடியவர்க்கு
வானாடர் காணாத மன்"
இதில் வரும் 'வானாடர் காணாத மன்' என்பதன் பொருள் யாது ?

(x) வித்தியாதத்துவங்களுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

**2.** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(ii) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

(அ) "வேயுறு தோளிபங்கன்..."
(ஆ) "சங்கநிதி பதுமநிதி..."
(இ) "தந்ததுன் றன்னைக்..."
(ஈ) "அருவமு முருவு மாகி..."
(உ) "மூவரென இருவரென..."

**3.** "19 ஆம் நூற்றாண்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்க ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அரும்பாடுபட்டார்."

(i) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இளமைப் பெயர் என்ன? அவர் அவதரித்த ஆண்டு எது ?

(ii) நாவலர் உரை எழுதி, பதிப்பித்து வெளியிட்ட நூல்கள் **மூன்றினைப்** பெயரிடுக.

(iii) நாவலரின் சமுதாயப் பணிகளைச் சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

4. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

(i) சைவசமய குரவர்கள் பாடிய தலங்களை எப்பெயரால் அழைப்பர் ? ஆழ்வார்கள் பாடிய தலங்களை எப்பெயரால் அழைப்பர் ?

(ii) அடியவர்கள் தலயாத்திரை மேற்கொள்வதற்கான காரணங்கள் யாவை?

(iii) இந்தியாவில் **அல்லது** இலங்கையில் தலயாத்திரை மேற்கொள்ளப்படும் ஏதேனுமொரு திருத்தலம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

5. "போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!"

(i) திருத்தொண்டர் புராணம், வேறு எப்பெயரால் வழங்கப்படுகிறது ? அதனை இயற்றியவர் யார் ?

(ii) பெரியபுராணம் கூறும் சிவனின் சிதம்பர நடனம் பற்றிக் குறிப்பிடுக.

(iii) பெரியபுராணத்தின் சிறப்புகளைச் சுருக்கமாக விளக்குக.

6. "ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய."

(i) கந்தபுராணத்தில், 'திருப்பெருவடிவம்' அமைந்திருக்கும் காண்டத்தின் பெயர் என்ன?

(ii) கந்தபுராணம் உணர்த்தும் தத்துவக் கருத்துகள் யாவை ?

(iii) முருகனுக்குரிய முக்கிய விரதங்களுள் ஏதேனும் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.

7. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) திருமுறைத் தொகுப்பு

(ii) தைப்பூசம்

(iii) யோகர்சுவாமிகள்

(iv) சைவசமய விழுமியங்கள்

(v) நாட்டார் தெய்வ வழிபாடு

***

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/